பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*27 05 2026 WEDNESDAY 7 15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பொதுவிநியோக கட்டமைப்பை வலுப்படுத்த வகைசெய்யும் திட்டத்தை 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் செலவில் நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. காதி பொருட்களின் விற்பனை புதிய சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. சுகாதார திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
4. ஜப்பானில் தேசிய உளவு குழுமத்தை ஏற்படுத்துவதற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
5. உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Esha Singh தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

பொதுவிநியோக கட்டமைப்பை வலுப்படுத்த வகைசெய்யும் திட்டத்தை நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதற்காக 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாநிலங்களுக்கு இடையே உணவு தானியங்களை கொண்டு செல்வதற்கும், பொது விநியோக கட்டமைப்பை நவீனப்படுத்துவதற்கும் இந்த திட்டம் உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும் இதில் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுவிநியோக திட்ட பயனாளிகளின் விவரங்கள், இத்திட்டத்தின் கீழ் பொதுமக்கள் குறைகளை தெரிவிப்பதற்கான சேவை, உணவு தானியங்களை கொண்டு செல்லும் வாகனங்களை

கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

பொதுவிநியோக கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தை, 25 ஆயிரத்து 530 கோடி ரூபாய் செலவில் நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வறுமையை அகற்றுவதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு இந்த திட்டம் வகை செய்வதாக கூறினார்.

இதன்மூலம். இதன் செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

காதி பொருட்களின் விற்பனை புதிய சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியையும் பகிர்ந்துள்ளார்.

கடந்த நிதியாண்டில் காதி பொருட்களின் விற்பனை, ஒரு லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதை சுட்டிக்காட்டி, பிரதமர் இதனை பகிர்ந்துள்ளார்.

>>>>><<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுக் கூட்டம், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் குறித்தும், உரங்களின் கையிருப்பு குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சுகாதார திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2014ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2022ஆம் ஆண்டு 3 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது 3 மடங்கு அதிகமாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் உயரிய சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மஹாராஷ்ட்ராவில், மத்திய அரசின் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தலைமையிலான இன்று ஆய்வுக் கூட்டத்தில், இந்த திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த அம்மாநில துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, நதிநீர் இணைப்பு திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட மக்கள்நல திட்டங்களை வெளிப்படைத் தன்மையுடன், குறித்த காலத்திற்குள் செயல்படுத்துமாறு தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அனைத்து துறை செயலர்கள் மற்றும் தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

அரசு திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு குறித்த காலத்திற்குள் சென்றடைய வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அனைத்து அறிவிப்புகளும் இதன் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் திருமதி. ரேகா குப்தா அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

ராஜஸ்தானை ஒட்டிய எல்லைப்பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக விரிவான ஒருங்கிணைந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில், ஜெய்ப்பூரில் நடைபெற்ற உயர்நிலை ஆய்வுக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

எல்லைப்பகுதியில் ஊடுருவல்களையும், போதைப் பொருள் கடத்தலையும் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் இந்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

கர்நாடகாவில் முதலமைச்சரை மாற்றுவது தொடர்பான காங்கிரஸ் தலைவரின் முடிவினை, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ரன்தீர்சிங் சுர்ஜிவாலா இன்று பெங்களூருவில் அறிவிக்கவுள்ளதாக அம்மாநில உள்துறை அமைச்சர் திரு. பரமேஸ்வரா கூறியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இதற்காக திரு. ரன்தீர்சிங் சுர்ஜிவாலா இன்று பெங்களூரு வரவுள்ளதாக தெரிவித்தார்.

இருப்பினும், இந்த பிரச்சினையில் கட்சித் தலைமை எடுத்த முடிவுகள் குறித்த விவரங்கள் தமக்கு தெரியாது என்றும் திரு. பரமேஸ்வரா தெளிவுபடுத்தினார்.

இதற்கிடையே, சற்றுமுன் பெங்களூரு வந்த திரு. ரன்தீர்சிங் சுர்ஜிவாலா, விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்திற்கு அழைப்பு ஏதும் விடுக்கப்படவில்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

முதலமைச்சரை மாற்றுவது தொடர்பாக, முடிவு ஏதும் எட்டப்படவில்லை என்றும் திரு. ரன்தீர்சிங் சுர்ஜிவாலா தெரிவித்தார்.

>>>>><<<<<

கேரள முன்னாள் முதலமைச்சர் திரு. பினராயி விஜயனின் இல்லம் உட்பட பல்வேறு இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

திருவனந்தபுரத்தில் உள்ள திரு. பினராயி விஜயன் இல்லத்தில் இன்று காலை முதல் சோதனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கேரளம் முழுவதும் 10க்கு மேற்பட்ட இடங்களில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

இதற்கிடையே, இந்த சோதனையை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், புதுதில்லியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

>>>>><<<<<

ஆந்திராவில் அடுத்து நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில், பெண்களுக்கு 33 சதவீத இடங்கள் வழங்கப்படவுள்ளதாக தெலுகு தேசம் அறிவித்துள்ளது.

அமராவதியில் நடைபெற்ற அக்கட்சியின் வருடாந்திர மாநாட்டில், தேசிய செயல் தலைவர் திரு. நரலோகேஷ் இதற்கான அறிவிப்பினை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டம் செயல்பாட்டிற்கு வந்தாலும் வராவிட்டாலும், தமது கட்சி இதனை செயல்படுத்தவுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டிலேயே முதன்முறையாக தெலுகு தேசம் இந்த முடிவினை மேற்கொண்டுள்ளதாகவும் திரு. நரலோகேஷ் தெரிவித்தார்.

>>>>><<<<<

பீகாரில் ஹெலிகாப்டர் சுற்றுலாவிற்கு ஊக்கமளிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஹெலிகாப்டர் முனையங்கள், வால்மிகி நகர் மற்றும் Kaimur-ல் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் சுற்றுலாவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு. சாம்ராட் சௌத்ரி தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜப்பானில் தேசிய உளவு குழுமத்தை ஏற்படுத்துவதற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

வெளிநாடுகளின் அச்சுறுத்தல்கள் தொடர்பான உளவுத் தகவல்களை ஒருங்கிணைக்க ஏதுவாக இந்த குழுமம் ஏற்படுத்தப்படவுள்ளதாக ஜப்பான் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இருப்பினும் இந்தக் குழுமத்தின் செயல்பாடுகளை நாடாளுமன்றம் கவனிப்பதற்கான பிரிவுகள் இதற்கான புதிய சட்டத்தில் இடம்பெறவில்லை என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

*உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Esha Singh தங்கப்பதக்கம் வென்றார்.*

*ஜெர்மனியின் Munich-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 25 மீட்டர் பிரிவில், புதிய உலக சாதனையுடன் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>><<<<<*

*சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 10-21, 21-12, 21-18 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Jonatan Christie-யை வென்றார்.*

*கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Tanisha Crasto - Dhruv Kapila** இணை, 21-14, 20-22, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Wong Tien Ci – Lim Chiew Sien இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.*

*>>>>><<<<<*

*ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய ஆடவர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ஹர்மன் ப்ரீத்சிங் தலைமையிலான இந்த அணியில், 24 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*>>>>><<<<<*

*நார்வே செஸ் போட்டியின் இரண்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Gukesh** இரண்டரை புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.*

*>>>>><<<<<*

*கொழும்புவில் நடைபெற்று வரும் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பைக்கான மகளிர் கூடைப்பந்து தகுதிச் சுற்று போட்டியில், இன்று இந்தியா 110-24 என்ற புள்ளிக்கணக்கில் மாலத்தீவை வென்றது.*

*>>>>>END<<<<<*